செ.வெ.எண்:49 நாள்:27.07.2021

# <u>பத்திரிக்கை செய்தி</u>

**நாகப்பட்டினம் மாவட்டத்தில் புகையிலை மற்றும் நிக்கோட்டின் கலந்த உணவு பொருட்கள் விற்பனை செய்யும் பெட்டி கடைகள், பலசரக்கு கடைகள், உற்பத்தி செய்பவர்கள், சேமித்து வைப்பவர்கள், விநியோகிப்பவர்கள் மற்றும் வாகனங்களில் எடுத்து செல்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என கடை உரிமையாளர்களுக்கு மாவட்ட ஆட்சியர் மருத்துவர்.அ.அருண் தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் வெளியீடும் செய்தி குறிப்பு.**

பொது மக்களில் சிலர் தாங்கள் அன்றாடம் பயன்படுத்தும் சில போதை உண்டாக்க கூடிய, உணவு பொருட்களால் அவர்களுக்கு போதை உண்டாவது மட்டுமல்லாமல் அப்பழக்கம் அவர்களால் கைவிடமுடியாமல் தொடர்ச்சியாக அப்பழக்கத்திற்கு ஆளாகி பல கொடிய நோய்களால் அவதிபடுகிறார்கள். அவர்கள் தொடர்ச்சியாக இது போன்ற பொருட்களை உட்கொள்வதால் வாய், உதடு, தொண்டை, நுரையீரல் மற்றும் வயிற்றில் புற்றுநோய் எனப்படும் (Cancer) கொடிய நோய்க்கு ஆளாகி தவிக்கிறார்கள். இதனை அறிந்த நமது மாண்புமிகு தமிழக அரசு, உணவு பாதுகாப்பு தரச்சட்டத்தின் பிரிவு Regulations 2.3.4 of FSS(prohibition and restriction on sale) Regulation 2011 ன்படி தமிழகத்தில் புகையிலை மற்றும் நிக்கோட்டின் கலந்த உணவு பொருட்கள் (வாயில் சுவைக்கும் உணவு பொருட்கள், குட்கா மற்றும் பான்மசாலா) போன்றவைகளுக்கு 2013 ஆம் ஆண்டு முதல் தடை விதித்தது.

அதனை தொடர்ந்து அனைத்து வருடமும் தமிழக அரசால் தடை உத்தரவு நீட்டிக்கப்பட்டு வருகிறது. எனவே இந்த ஆண்டும் 23.05.2021 ஆம் தேதி முதல் அவ்வுத்தரவு மாண்புமிகு தமிழக அரசால் மீண்டும் ஓராண்டு காலம் நீட்டிக்கப்பட்டது. அதில் தமிழகத்தில் வாயில் வைத்து விழுங்ககூடிய உணவு பொருள், (Hans, Panparak, Panmasala, Gutkha, CoolLip and sented Tobacco) போன்ற பொருட்களில் புகையிலை மற்றும் நிக்கோட்டின் கலந்திருக்குமாயின் அவற்றை அடுத்த ஓராண்டிற்கு இம்மாநிலத்தில் தயார் செய்யவோ, சேமித்து வைக்கவோ, வாகனத்தில் கொண்டு செல்லவோ, விநியோக செய்யவோ மற்றும் விற்பனை செய்யவோ தடை விதித்துள்ளது.

இது போன்ற பொருட்களை பொது மக்கள் வாங்கி பயன்படுத்துவதால் அவர்களுக்கு அஜீரனக் கோளாறு, தூக்கமின்மை, வாயில் புற்றுநோய், தாடை புற்றுநோய், உதட்டு புற்றுநோய், நுரையீரல் புற்றுநோய் மற்றும் வயிற்றில் புற்றுநோய் போன்றவை ஏற்பட்டு உயிருக்கு ஆபத்து விளைவிக்கின்றது. எனவே இதை கட்டுக்குள் கொண்டுவர உணவு பாதுகாப்பு துறை மற்றும் காவல் துறையும் இணைந்து தீவிரமாக கண்காணிக்க மாவட்ட ஆட்சியர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

மேலும், அவ்வாறு தொடர்ந்து விற்பனை செய்பவர்களை கண்டறியும் பட்சத்தில் அவர்கள் மீது கிரிமினல் வழக்கு பதிவு செய்யவும் அதிகமாக அபராதம் விதிக்கவும் உத்தரவிட்டுள்ளார்.

எனவே இம்மாவட்டத்தில் உள்ள பெட்டி கடைகள், மளிகை கடைகள், பலசரக்கு கடைகள் மற்றும் சிறப்பு அங்காடிகள், அரசால் தடைசெய்யப்பட்ட புகையிலை மற்றும் நிக்கோட்டின் கலந்த உணவு பொருட்களை விற்பனை செய்யவோ, விநியோகம் செய்யவோ, வாகனத்தில் எடுத்து செல்லவோ, சேமித்து செய்யவோ, மற்றும் உற்பத்தி செய்யவோ கூடாது என உத்தரவிட்டுள்ளார்.

மேலும் பொதுமக்கள் அத்தகைய புகையிலை மற்றும் நிக்கோட்டின் கலந்த உணவு பொருட்கள் விற்பனை செய்வதை காணும் பட்சத்திலும் மேலும் உணவு சார்ந்த அனைத்து புகார்களுக்கும் அரசின் வாட்ஸ்சப் புகார் எண் 9444042322 என்ற எண்ணுக்கு தொடர்பு கொண்டு புகார் தெரிவிக்கலாம் என்று மாவட்ட ஆட்சியர் அவர்கள் அறிவுறுத்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**